## 2019ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ஆம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சிறப்பு கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :**
**திரு. க. பாலு,**
**தனி அதிகாரி,**
**விருத்தாசலம் நகராட்சி.**

**பொருள் எண். 1.**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 17349/2019/இ2, நாள். 03.09.2019ல் விருத்தாசலம் நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019–2020ன்கீழ் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. கோடியில்) | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மான்ய நிதி (ரூ. கோடியில்) | மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு / மான்ய நிதி / நில அபிவிருத்திக் கட்டணம் (ரூ. கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| விருத்தாசலம் | 5.00 | 0.50 | 2.70 | 1.80 |

எனவே, மேற்காண் நிதி ஒதுக்கீடு ஏற்புடையதாயின் சாலை பணிகளை மேற்கொள்ள குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகைக்கு நகர்மன்றத்தில் தீர்மானம் இயற்றி அதனை நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 1-8 | வி.ஐ.பி தெரு, ஆர்.சி. சர்ச் சுடுகாடு எதிர்புறம், வி.ஐ.பி முதல் குறுக்குத் தெரு, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் பின்புறம், வேலன் நகர், மாணிக்கவாசகர் நகர் விரிவாக்கம், கண்டியங்குப்பம் மெயின் ரோடு மற்றும் குறுக்குத் தெருக்கள் ஆகிய பகுதிகளில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. (சிப்பம்–I) | 2.250 | 4.5 | 175.00 |
| 2 | 8-15 | ஆலடி மெயின் ரோடு, பங்களா தெரு, தினசரி காய்கறி மார்கெட் ரோடு, இந்திரா நகர் விரிவாக்கம் மசூதி அருகில் ஆகிய பகுதிகளில் தார்சாலை, சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல். (சிப்பம்–II) | 1.300 | 5 | 150.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 16-33 | வைரம் தெரு, பவழம் தெரு, பாலாஜி நகர் விரிவாக்கம், எம்.ஜி.ஆர் நகர், பூந்தோட்டம் பள்ளி முதல் ஏனாதிமேடு வரை, ஏனாதிமேடு முதல் பூதாமூர் வரை, கண்ணதாசன் தெரு, கம்பர் தெரு, சௌடாம்பிகா பின்புறம், தில்லை நகர் பாரதியார் தெரு கிழக்கு, தில்லை நகர் பெந்தகொஸ்தே சர்ச் சாலை, தில்லை நகர் எம்.ஜி. ஆஸ்பத்திரி ரோடு, அருணாச்சலம் தெரு, கணபதி தெரு, நவநீதம் திருமண மண்டப தெரு, திருமூலர் தெரு, தமிழ்நகர் ஆகிய பகுதிகளில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. (சிப்பம்–III) | 2.450 | 4.0 | 175.00 |
| | | **TOTAL AMOUNT:** | 6.000 | | **500.00** |

இந்நிலையில் இந்நகராட்சியில் ஏற்கெனவே ஒப்பந்ததாரர்களுக்கு நகராட்சி பங்களிப்பு தொகையாக சிறப்பு சாலைகள் திட்டம் 2015–16ன் கீழ் ரூ. 60.00இலட்சமும், தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2016–17 (பகுதி-I) ன் கீழ் ரூ. 170.00 இலட்சமும், தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2016–17 (பகுதி-II) ன் கீழ் ரூ. 150.00 இலட்சமும், பொது நிதி பணிகளுக்கு சுமார் ரூ. 150.00 இலட்சமும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின் கட்டணமாக ரூ. 100.00 இலட்சமும் தொகை வழங்கப்படாமல் நிலுவை உள்ளது. மேலும் TUFIDCO நிதி உதவியிடன் வட்டியில்லா கடனுதவி திட்டத்தின் கீழ் ரூ. 429.20 இலட்சம் மதிப்பீட்டில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் நகராட்சி பங்களிப்புடன் மேற்படி திட்டத்தினை செயல்படுத்த இயலாத நிலை உள்ளதால், தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019–2020 க்கான திட்ட தொகையினை விருத்தாசலம் நகராட்சி நலன் கருதி முழுமான்யமாக வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3281/2019/இ1)

**தீர்மானம் எண். 3554 நாள். 10.09.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 2.</u>**

விருத்தாசலம் நகரம் தொன்மை வாய்ந்த அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயிலை கொண்ட ஆன்மீக நகரமாகும். இந்நகரம் மிக வேகமாக வளர்ந்து வரும் நகரமாகும். இந் நகரத்தை சுற்றி 100க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளது. இக்கிராம மக்கள் தங்களது அனைத்து வணிகம் தொடர்பான பரிவர்த்தனைகளையும் இந்நகரில் தான் செய்து கொள்கிறார்கள். இங்கு விவசாய விளை பொருட்களை சந்தைபடுத்தும் ஒழுங்குமுறை விற்பனை கூடம் உள்ளது. இதன் மூலம் வருடம் முழுக்க வியாபாரிகள் நகருக்கு வந்து வியாபாரம் செய்கின்றனர். மேலும் தென்னக ரயிவேயின் மெயின்லைன் இருப்பு பாதை காஷ்மீர் கன்னியாகுமரியை இணைக்கும் இணைப்பு பாதை உள்ளது. முக்கிய சந்திப்பும் உள்ளது. இந்நிலையில் ஏற்கனவே உள்ள பழைய பேருந்து நிலையத்தில் 25 பேருந்துகளை நிறுத்தும் தளங்கள் தான் உள்ளது. திருவிழா காலங்களில் மிகுந்த இட நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்து பாதிக்கிறது. இதனை கருதி இந்நகர்மன்ற தீர்மான எண். 661, நாள். 27.12.2007ல் நகரளவை வார்டு டி, பிளாக் எண். 6 நகரளவை எண். 2ல் 48250 ச.மீட்டரும், வார்டு டி, பிளாக் எண். 34, நகரளவை எண். 34ல் 78150 ச. மீட்டரும் உள்ள சுமார் 10 ஏக்கர், அரசு பீங்கான் தொழிற்சாலைக்கு சொந்தமான தற்போது எந்த பயன்பாடும் இல்லாத காலி இடத்தினை புதிய பேருந்து நிலையம் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டு அரசிற்கு பிரேரணை சமர்பிக்கப்பட்டுள்ளது. இது நீண்ட நாட்களாக தொடர்நடவடிக்கை இல்லாததால் தற்போது புதியதாக மன்ற தீர்மானம் நிறைவேற்றி மீண்டும் அரசிற்கு பிரேரணை அனுப்பலாம். மன்றத்தின்ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

நகரின் எதிர்கால வளர்ச்சியை கருதி புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பிரேரணைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 3790/எப்1/2019.

**தீர்மானம் எண். 3555 நாள். 10.09.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 3.</u>**

விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் பொது மக்கள் கூடும் இடங்களில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி மேற்கொள்ள நிலவேம்பு பவுடர் தற்சமயம் கையிருப்பு குறைவாக உள்ளதால் எதிர் வரும் மழைக்காலங்களில் தொடர்ந்து பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்கள், பொது மக்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கிட ஏதுவாக 200 கிலோ கிராம் நிலவேம்பு பவுடர் வாங்குவதற்கும், அதற்கான தோராய செலவினம் ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 00273/2016/எச்1)

**தீர்மானம் எண். 3556 நாள். 10.09.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 4.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2019–20க்கான பணிகள் தேர்வு செய்து திட்ட மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அவர்களுக்கு உடனடியாக சமர்பிக்க தெரிவித்ததற்கிணங்க, பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15) கீழ் திரு. சி. பாண்டு, நகராட்சி பொறியாளர் மூலம் திட்ட மதிப்பீடு தயார் செய்துள்ளதற்கான செலவினத் தொகை ரூ. 12,685/– அன்னாருக்கு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 3281/2019/இ1)

**தீர்மானம் எண். 3557 நாள். 10.09.2019.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 5.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் Decentralized Waste Water Treatement Plant அமைப்பதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்து மாவட்ட ஆட்சியர், கடலூர் மற்றும் துணை இயக்குனர், கனிமவள சுரங்கம், கடலூர் அவர்களுக்கு உடனடியாக சமர்பிக்க தெரிவித்ததற்கிணங்க, பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15) கீழ் திரு. சி. பாண்டு, நகராட்சி பொறியாளர் மூலம் திட்ட மதிப்பீடு தயார் செய்ததற்கான செலவுத் தொகை ரூ. 4000/– அன்னாருக்கு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 3146/2019/இ1)

**தீர்மானம் எண். 3558 நாள். 10.09.2019.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 6.</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் பன்றிகளை அப்புறப்படுத்த பன்றிகளை வளர்க்கும் உரிமையாளர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு அவகாசம் வழங்கப்பட்டது. ஆனால் உரிமையாளர்கள் இது நாள் வரை பன்றிகளை அகற்றப்படவில்லை. மேலும் பன்றிகளின் தொல்லைகள் மிக மிக அதிகமாக உள்ளதை சுட்டிக்காட்டி பொதுமக்களிடையே புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இதனால் பன்றிகளை உயிருடன் பிடித்து அப்புறப்படுத்திடவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண். 7581/2015/எச்1)

**தீர்மானம் எண். 3559 நாள். 10.09.2019.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.7.</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 32 மற்றும் 33ல் சிவபூஜா திருமண மண்டபத்திலிருந்து சித்தலூர் பைபாஸ் வரை சாலைகள் அபிவிருத்தி பணிக்காக நெடுஞ்சாலை துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ளும் பொழுது பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் பைப்லைன் ரோட்டின் இருபக்க ஓரங்களில் பதிக்கப்பட்டவை முற்றிலும் சேதம் ஏற்பட்டு பயன்படுத்த முடியாமல் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க சிரமமாக உள்ளதால் நெடுஞ்சாலை துறையின் மூலம் சாலைகள் விரிவாக்கம் செய்யும் பணி முடிந்தவுடன் மேற்கண்ட இடத்திற்கு புதிய பைப்லைன் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9,95,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3560 நாள். 10.09.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 8.</u>**

விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 33 சித்தலூர் காலனி மெயின் ரோட்டில் பல ஆண்டுகளுக்கு முன் மழைநீர் வடிகால் கருங்கற்களால் கட்டியது சரிந்தும் இடிந்தும் கிடப்பதால் மழைக்காலங்களில் கால்வாயில் தண்ணிர் சரியான முறையில் செல்லாமல் தேங்கி நிற்கிறது. அதனை சீர் செய்து கொடுக்குமாறு அப்பகுதி பொது மக்கள் நேரில் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அப்பகுதியை சென்று ஆய்வு செய்து அப்பகுதியில் புதிய புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 7,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3561 நாள். 10.09.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 9.</u>**

விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 12 வீரபாண்டிய தெரு அன்பு நகர் முதல் தென்றல் தெரு வரை புதிய பைப்லைன் அமைக்கவும் மற்றும் வார்டு எண். 6 முல்லை நகர் பகுதியில் பைப்லைன் அமைக்கவும் மற்றும் வால்வு அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 1.30 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3562 நாள். 10.09.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 10.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் உள்ள தெருவிளக்குகளின் சுவிட்ச் பாக்ஸ் அனைத்திலும் மின்சார சிக்கனம் கருதியும் காலதாமதம் ஏற்படுவதை தடுக்கும் வகையிலும் தானியங்கி Single Phase Times 60 எண்ணிகை மற்றும் Three Phase Times 1 எண்ணிகை பொருத்துவதற்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ. 5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3563 நாள். 10.09.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 11.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16 தெற்கு பெரியார் நகர் ராஜவேல் வீதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் அன்னியர் யாரும் பிரசிங்கம் செய்யாமல் இருக்கவும், நகராட்சி சொத்தை பாதுகாக்கும் பொருட்டும் மேற்படி பூங்காவில் கம்பி வேலி அமைத்து Gate அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 4.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3564 நாள். 10.09.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 12.</u>**

விருத்தாசலம் நகராட்சி வார்டு எண். 1ல் வயலூர் உரத்திடலில் புதியதாக அமைக்கப்பட்ட முன்பக்க ஷெட்டின் பாதுகாப்பு நலன் கருதியும், மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் அனுமதி பெறவேண்டியதாலும், மழைக்காலங்களில் சாரல் அடித்து அங்கு அமைக்கப்பட்ட இயந்திரங்கள் (குப்பைகளை தரம் பிரிக்கும் இயந்திரம்) நனையாமல் இருக்கவும், அங்கு அமைக்கப்பட்ட MCC தொட்டிகள் மழைக்காலங்களில் சாரலில் நனையாமல் இருக்கவும், ஷெட்டினை சுற்றி தடுப்புச் சுவர் மற்றும் சீட் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9,95,200/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3565 நாள். 10.09.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13.**

விருத்தாசலம் நகராட்சி வார்டு எண். 1ல் வயலூர் உரத்திடலில் சுற்றுச் சுவர் உள் பகுதியில் சுற்றிலும் பசுமைக்காக மரம் வைத்து பாதுகாக்கும் பொருட்டு மரத்திற்கு தண்ணீர் Borewell ல் இருந்து விடுவதற்கு பைப்லைன் அமைத்தும், கேட் வால்வு வைத்தும், Tap அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 3,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3566 நாள். 10.09.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14.**

விருத்தாசலம் நகராட்சியின் 33 வார்டுகளிலும் அனைத்து தெருக்களில் நாய்கள் அதிகமாக பெருகி சுற்றி திரிகிறது. மேலும் பலரை கடித்துள்ளதாகவும், அவற்றை எல்லாம் அப்புறப்படுத்தக்கோரி புகார்கள் வரப்பட்டுள்ளதை தொடர்ந்து நகரி சுற்றித்திரியும் நாய்களைப் பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து பின்பு வெறி நோய் தடுப்பு ஊதி போட்டு அப்புறப்படுத்துவதற்கும், அதற்கான தோராய செலவினம் ரூ. 5.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி ( மன்றத்தீர்மான எண். 3243, நாள். 30.11.2018) ஆனால் தற்சமயம் 910 நாய்கள் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. எனவே 910 நாய்களுக்கு ரூ. 750/– வீதம் ரூ. 682500/– தொகை வழங்கப்பட வேண்டியுள்ளதால் கூடுதலாக செலவாகும் ரூ. 182500/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3567 நாள். 10.09.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 15.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16ல் பெரியார் நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் 10 கடைகள் மற்றும் வார்டு எண். 6 ஜங்ஷன் ரோட்டில் 1 கடை ஆகியன கட்டி முடிக்கப்பட்டு ஏலம் விட தயாராக உள்ளதாகவும் மேற்படி கடைகளை பொது ஏலம் விட உரிய பொதுப்பணித்துறை கணக்கீட்டு தாள் நகராட்சி பொறியாளர் மூலமாக அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்சியாக மேற்கண்ட பெரியர் நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள கடைகள் 10 மற்றும் ஜங்ஷன் ரோடு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கடை 1 ஆகியவற்றை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர ஏல முன் வைப்புத் தொகை, சால்வன்சி மதிப்பு, கூடுதல் வைப்புத் தொகை மற்றும் மின்சார பொறுப்புத் தொகை ஆகியவை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதித்து நிர்ணயம் செய்யலாம்.

**தீர்மானம் எண். 3568 நாள். 10.09.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 16.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 6ல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள தற்காலிக 23 கடைகள் புனரமைக்கப்பட்டு வரப்படுகிறது. மேற்கண்ட கடைகளில் 10 கடைகளின் மராமத்து முடிவுற்றுள்ளது. எஞ்சிய 13 கடைகளின் மராமத்து புனரமைப்பு பணி முடியும் தருவாயில் உள்ளதால் மேற்கண்ட 23 கடைகளை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், முன் வைப்புத் தொகை, கூடுதல் முன் வைப்புத் தொகை, சொத்து மதிப்புச் சான்று, மின்சாரப் பொறுப்புத் தொகை ஆகியவை நிர்ணயம் செய்யவும், ஏல விளம்பரம் தமிழ் தினசரி நாளிதழ் ஒன்றில் ஒரு நாள் மட்டும் வெளியிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதித்து நிர்ணயம் செய்யலாம்.

**தீர்மானம் எண். 3569 நாள். 10.09.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 17.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 32 சாவடிக்குப்பம் இடுகாட்டில் உள்ள நவீன எரிவாயு தகன மேடை கட்டி முடிக்கப்பட்டு 6 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டபடியாலும், தற்போது அங்கு உள்ள இயந்திரங்கள் மற்றும் கட்டிடங்களை பராமரிப்பு பணி மேற்கொள்ளவேண்டியுள்ளதால், மேற்படி நவீன எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9,94,600/— க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3570 நாள். 10.09.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**